# DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 51 /2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW5** | | |
| **Name** | : | .செந்தில்குமார் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : . | ராஜேந்திரன் | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவயிடத்தில் சலூான் கடை வைத்துள்ளேன். 2017ம் ஆண்டு 7ம் மாதம் விபத்து நடந்தது. அப்போது காலை 10:00 மணி இருக்கும். நான் எனது சலூான் கடையில் இருந்தேன். நான் வாடிக்கையாளர்களை கவனித்துக்கொண்டு இருந்தேன். சம்பவம் நடந்து காயம்பட்ட நபரை தூக்கிசென்றபின்பு போலீசார் அங்கு வந்து பார்வையிட்டு படம் வரைந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் படம் வரைந்து என்னென்ன கடை உள்ளது என்று விசாரித்து எழுதினார்கள். என்னுடன் சாட்சி பிரபுவும் இருந்தார். அவரும் பார்வை மகசரில் கையொப்பம் செய்துள்ளார். (**அந்த பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** எனது கடை சம்பவயிடத்தில் தென்புறத்தில் மேற்குபுறத்தில் உள்ளது என்றால ் சரிதான். நானும் இன்னொரு பையனும் வேலை பார்த்துக்கொண்டு இருந்தோம். போலீசார் வந்து எங்களை அழைத்தார்கள், நாங்கள் சென்றோம். இறந்தவர் எனக்கு தாத்தா முறை ஆவார். என்னிடம்ஒரு கையெழுத்து தான்

வாங்கினார்கள். நான் படம் வரைந்தபேப்பரில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் விசாரித்து எழுதிய பேப்பரில் தான் போட்டேன். என்ன எழுதியிருந்தார்கள் என்று தெரியாது. போலீசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். விபத்து நடந்து அடிபட்ட நபரை தூக்கி சென்றபின் வந்தார்கள், எத்தனை மணி என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் படம் வரைந்த போது சுமார் 10 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் உறவினர் என்பதால் என்னையும் பிரபுவையும் காவல் நிலையத்திற்கு வரவழைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் சம்பவயிடத்திற்கு போலீசார் வந்து மகசர், வரைபடம் தயாரித்து இருந்தால் ஏற்கனவே கூட்டத்தில் வேடிக்கை பார்த்தவர்களையோ அருகில் கடைவைத்திருந்தவர்களையோ கையெழுத்து வாங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல.

S.d./ Senthilkumar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.